சகல சௌபாக்யங்களும் தருகின்ற
விநாயகப் பெருமானின்



# காரியசித்தி மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீமஹா கணபதி ஸ்துதி

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோபசாந்தயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகாதுண்ட மஹாகாய
ஸூர்ய கோடி ஸமப்ரப
அவிக்னம் குருமே தேவ
ஸர்வ கார்யேஷு ஸர்வதா

கஜாநநம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபலஸார பக்ஷிதம்
உமாஸஷூதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்

அகஜானன பத்மார்க்கம்
கஜானனம் அஹர்நிசம்
அநேகதம் தம் பக்தானாம்
ஏகதந்தம் உபாஸ்மஹே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து காக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டுங் களைக்கண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுடர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீா இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டும் குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன்
மூன்று தினம் மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபம்பெறும்எண் தினம் உச்
சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில்
அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்தொரு முறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
தூங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியை என்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மாகோ தரர்காக்க
தடவிழிகள் பாலசந் திரனார் காக்க !!
கவின்வளரும் அதரம் கசமுகர் காக்க
காலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைகார் காக்க
நனிவாக்கைவிநா யகபுதாம் காக்க
அவிர்நகை மின் முகர் காக்க
அள் எழிற் செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுரு திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனி காக்ககளக் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம்மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க !!
பக்கம் இரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கண பன் காக்க
ஊருவை மங் களமூர்த்தி உவந்து காக்க
தாள்முழந்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம் க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்கு வார்நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க !!
திக்குகள் அனைத்திலிருந்தும் காக்க:
அக்னியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் திசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர் காக்க
விக்கினவர்த்தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க
வாயுவிற் கசகர் ணன்காக்க
திகழ்உதீசி தக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க !!
ஏகதந்தர் பகர்முழுதும் காக்க
இர வினும்சுந்தி இரண்டன் மாட்டும்
சையின் விக் கினகிருது காக்க
இராக் கதர்பூதம் உருவேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்திரத்தால்
வருந்துயரம் முடிவிலாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமுறு பிணிபலவும் விலக்குபு
பாசாங்குசர்தாம் விரைந்துகாக்க !!
மதிஞானம் தவந்தரன ம்மானம் ஒளி
புகழ்குலம் வண்சசரீரம் முற்றும்
பதிவான தனம்தானியம் கிருதம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாரும் சுற்றமெல்லாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க !!
வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரி யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவரவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெங்சிற்குடி கொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகழொழிமார்பும்
சொற்பதாங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக்களிறே
முப்பழநுகரு மூஷிகவா'ன
இப்பொழுதென்னை யாட்கொள்ளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுந்துந்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகை தான் மகிழ்ந் தெனக்கருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்தன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணை இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்து
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் த ங்குசநிலையும்
பேறாநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங்காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலியதனிற் கூடியஅசபை
விண்டெழுமந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும்மனமும் இல்லாமனோலயந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியேயென் சிந்தைதெளிவித்து
இருள்வெளியிரண்டும் கொன்றிடமென்ன
அருள்தருமானந்தத் தமுத்தியென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடும்மெய்த்தொண்டர் சூழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அருள்பொருள்தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தக! விநாயகா! விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ID CARD PRINT-KEY TAG & MUG PRINT-CD,DVD PRINT-RUBBER STAMP-DURO FRAME -LAMINATION-COLOUR PHOTOCOPY
BINDING - SCAN-A4,A3 DIGITAL PRINTS- AND MUCH MORE

**OSAI Digital** for all your designing & printing needs
+94 77 5433356 | 473,1/1A, Galle Road, Wellawatte

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org